RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s22218

# தருமபுரி மாவட்டப் போயர் இன மக்களின் வழிபாட்டு மரபுகள்

வெ. சதீஸ் [அ, *], ரா. தேவணன் [அ]

[அ] தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா

# Religious Traditions of the Boyar Community People of Dharmapuri District

V. Satheesh [a, *], R. Devanan [a]

[a] Department of Tamil, Periyar University, Salem-636011, Tamil Nadu, India

* Corresponding Author: vsatheeshselvi25@gmail.com

Received: 27.09.2022
Revised: 02-11-2022
Accepted: 06-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

The culture of a country is closely related to its history and the worship of the people of that country. The cultural genetics of India can be traced back to various traditions and forms of worship. Hinduism, which is said to be the majority religion among them, has many forms of worship along with the sects of Saivism and Vaishnavism. In today's scenario, there is a tendency to integrate the worship of folk deities with Hinduism. The folk deities differ from the Saiva and Vaishnava deities in character and manner of worship. However, the process of associating them with Saiva and Vaishnava deities and trying to connect them with them continues. Moreover, religions such as Christianity, Islam, Buddhism, Jainism, etc., are also attracted by folk deities and cultural elements, and there is a tendency to change themselves in order to get closer to them. Therefore, it can be felt that people's lives depend on their ways of worship. The life aspects of the Boyar community people of Dharmapuri district can be understood through their methods of worship. Thus, the worship and rituals of the Boyer people can be understood from this article.

**Keywords:** Worship, Faith, Dictionary

## முன்னுரை

பழங்கால மக்களிடத்தில் இயற்கைப் பொருட்களையும் இயற்கை ஆற்றலையும் வழிபடு வழக்கம் இருந்தது. அந்த வழக்கம் நாட்டப்புற மக்களிடத்தில் இன்னும் இருந்து வருகின்றது. இயற்கையின் மீது மனிதன் தான் கொண்டிருந்த அச்சமும் அன்பும் நாட்டுப்புற வழிபாட்டிற்கு அடிப்படையாகும். இயற்கை வழிபாடு, முன்னோர் வழிபாடு, குலக்குறி வழிபாடு, போன்றவற்றை இயல்புகளாகக் கொண்டவர்கள். தமிழ்நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் ஒரே வழிபாட்டு முறைகளைக் கடைபிடிப்பதில்லை. சாதியாலும் பல்வேறு உட்பிரிவுகளாலும் வேறுபட்டவர்கள். பொதுவான ஒரு தெய்வத்தை மட்டும் வழிபடுவது இல்லை. அவ்வகையில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள போயர் இன மக்களின் வழிபாட்டு மரபுகளை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வழிபாடு - விளக்கம்

மனிதன் தன்னுடைய ஆற்றல் ஒரு வரம்புக்குட்பட்டது என்று உணரத் தொடங்கிய நிலையில் வழிபாடு எனும் கடவுள் கோட்பாடு தோற்றம் பெற்றது. அதாவது இயல்பான நிலையைக் கடந்த ஆற்றல்களின் பால் எழுந்த நம்பிக்கைகள் வழிபாடுகள் தோன்றுவதற்கு அடிப்படையாயின. “வழிபாடு என்பதனை வழி + பாடு எனப் பிரிக்கலாம். வழி இறைப்பேற்றிற்குரிய வழியை அடைவதற்கு மனிதன்

மேற்கொள்ளும் செயல் முறைகளே வழிபாடு" என்று கலைக்களஞ்சியத்தின் வழி அறியமுடிகிறது. திருமகள் தமிழ் அகராதி வழிபாடு என்ற சொல்லுக்கு, "பூசனை, வணக்கம்"[2] என்று பொருள் தருகின்றது (Ramasubramaniam, 2002). நர்மதாவின் தமிழ் அகராதி வழிபடுதல் என்ற சொல்லுக்கு "வணங்குதல், தொழுதல்"[3] என்ற பொருள் தருகின்றது (Marutidasan, 2019). வெள்ளிவிழா தமிழ் பேரகராதி வழிபாடு என்ற சொல்லுக்கு, "அப்பியாசம், ஆராதனை, தாழ்மை, வணக்கம், வழிபடல்" என்ற பொருட்களை உரைக்கின்றது (Sankaralingamudiyar, 2014).

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கலாம் என நம்பினான். அதனடிப்படையில் இயற்கை வழிபாடுகளும் விழாக்களும் தோற்றம் பெற்றன. பலிகள் தருவதன் மூலம் இயற்கையினை வயப்படுத்தி விடலாம் என்ற அடிப்படையில் விழாக்களும் கொண்டாட்டங்களும் தோன்றின. காலப்போக்கில், "இயற்கைக்கு உருவம் கொடுத்து வழிபடத் தொடங்கினர். மக்களிடையே உருவ வழிபாடு தோற்றம் பெற்ற பின் பழங்கால மனிதன் இடி, மின்னல் மழையைக் கண்டு அஞ்சி நோய் முதலியவற்றிற்கு ஆவிகளே காரணமென எண்ணினான். அவ்வாவிகளை வழிபட ஆரம்பித்தான்" என்று உளவியல் பேரறிஞர் சிக்மண்ட் பிராய்டு (sigmund pravd) அவர்களும் இயற்கையிடமும் மரணத்திற்கும் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம் என்கிறார் (Sakthivel, 1989).

## இயற்கை வழிபாடு

தொல் பழங்காலத்தில் போயர் இன மக்களிடையே இயற்கை வழிபாடு இருந்தது. போயர் இன மக்கள் செய்யும் தொழில்கள் நிலத்தின் அடிப்படையில் அமைகின்றது. இம்மக்கள் வேலை தொடங்கும் முன் ஐம்பூதங்களில் ஒன்றான நிலவழிபாடு செய்கின்றனர். அப்படி வணங்கும் பொழுது வழிபாட்டுப் பொருட்களை வைத்து வணங்குகின்றனர். மஞ்சள் குங்குமம், வெற்றிலை பாக்கு, பூ, பழம், எலுமிச்சை, காணிக்கை போன்ற பூசை பொருட்களை வைத்துத் தங்களுக்கு வேலை முடியும் வரை எவ்வித இடர்பாடும் ஏற்படாமல் இருக்க வேண்டுகின்றனர்.

## முன்னோர் வழிபாடு

இறந்த முன்னோர் வழிபாட்டைத் தமிழகமெங்கும் காணலாம். தமிழருடைய நடுகல் வழிபாடும் முன்னோர் வழிபாட்டோடுத் தொடர்புடையதாகும். ஒருவர் செய்த அருஞ்செயல்கள் அவர் இறந்த பின்புமும் அவருடைய உறவினருடன் தொடர்பு பெறுகின்றன என்ற நம்பிக்கையே முன்னோர் வழிபாட்டிற்கு அடிப்படையாகும். "இனத்தவர் தோன்றுவதற்கு காரணமாகயிருந்தவரை வழிபடுவதும் இவ்வழிபாட்டில் அடங்கும். சீனா நாட்டிலும் முன்னோர் வழிபாடு இருந்துள்ளது. நமது நாட்டில் ஆண்டுதோறும் திவசம், அமாவாசையன்று நோம்பிருத்தல் முன்னோர் வழிபாட்டைச் சார்ந்தவை"[7] என டாக்டர் சக்திவேல் கூறுகிறார்.

தொல்பழ நாகரிகம், பண்பாடு பெற்ற போயர் இன மக்களிடம் முன்னோரை நினைவுறுத்தி வணங்கும் பழக்கம் இருந்துள்ளது. இந்த மக்கள் பண்டையக் காலம் முதல் தொன்று தொட்டு இன்று வரை ஆண்டுக்கு ஒரு முறை பொங்கல் திருநாளில் தம் முன்னோர்களை வழிபடுகின்றனர். "அவர்களை வணங்கும் பொழுது அவர்களுக்குப் பிடித்தமான உணவுகள் ஆடைகள், பலகாரம், பழம் வெற்றிலைபாக்கு, புகையிலை, கற்பூரம் போன்ற பொருட்களையும் வைத்து வழிபடுவது வழக்கம். அதன்பின்பு உறவினர்களையும் நண்பர்களையும் அழைத்து விருந்தளிக்கும் வழக்கம் நெடுங்காலமாகப் பின்பற்றப்படுகின்றது" எனத் தகவலாளர் ஜோதி கூறுகிறார்.

## குலதெய்வவழிபாடு

தருமபுரி மாவட்டத்தில் உள்ள போயர் இன மக்கள் தங்களின் குலதெய்வக் கோயிலுக்கு ஆண்டுக்கு ஒரு முறை செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும்பொழுது தங்களின் வீட்டில் உள்ள

பொருட்களைத் தூய்மைப்படுத்துவர். “குலதெய்வக் கோயில் பங்காளிகள் அனைவரும் ஒன்றுகுடி வழிபடுவர். அவர்களுக்கு ஏற்படும் நன்மை, தீமைகளைப் பூசாரி அருள்வாக்கு மூலம் சொல்வார். கோயில் உள்ள வழிபாட்டு முறையினை மாற்றம் செய்தால் தீங்கு ஏற்படும் என்று இம்மக்கள் நம்பிக்கைகொள்கின்றனர். இம்மக்கள் தங்கள் குழந்தைக்குக் குலதெய்வத்தின் பெயர் வைப்பர்.” எனத் தகவலாளர் வெங்கடாசலம் கூறுகிறார். பெரும்பாலும் போயர் இன மக்கள் பண்டாங்கர் என்கிற குலத்தார் புரட்டாசி மாதம் விரதம் இருந்து திருப்பதி ஏழுமலையான் தெய்வத்தை வழிபடுவர்.

## பெருந்தெய்வ வழிபாடு

தெய்வங்களில் சிறுதெய்வம் பெருந்தெய்வங் களுக்கிடையே மிகுந்த வேறுபாடு உண்டு. அதுபோல மனிதப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் பெருந்தெய்வ சிறுதெய்வ வழிபாடு என இருவகைகளாகப் பிரிந்து காணப்படுகிறது. போயர் இன மக்களிடையே பெருந்தெய்வ வழிபாடு காணப்படுகின்றது. “அவ்வகையில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள பண்டர் என்கிற கல்லுடைக்கும் பிரிவினர் சிவன், திருமால், முருகன், பிள்ளையார் போன்ற கடவுள்களை வழிபட்டு வருகின்றனர். பொதுவாக ஒருசிலர் தங்களின் நேர்த்திகடன் நிறைவேற வேண்டுமென்றும் வழிபட்டு வருகின்றனர் எனத் தகவலாளர் செல்வி கூறுகின்றார்.

## சிறுதெய்வ வழிபாடு

நாட்டுப்புறத் தெய்வங்களைச் சிறுதெய்வங்கள் என அழைப்பர். குடும்பத்தெய்வழிபாடும் குலதெய்வ வழிபாடும் ஊர்த்தெய்வ வழிபாடும் இவற்றில் அடங்கும். அவ்வகையில் போயர் இன மக்களிடையே மோகபிள்ளை செலிப்பிலாரு என்கிற குலத்தவர்கள் மலையனூர் அம்மனை தம் குலதெய்வமாக வழிபடுகின்றனர். இவர்களின் வழிபாட்டு முறைகள் முற்றிலும் வேறுபடுகின்றது. இம்மக்கள் தம் குலத்தெய்வத்தை ஐந்து, பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தெவத் திருவிழா நடத்துவர். “இம்மக்கள் தங்களின் குலத்தெய்வப் பூசாரியினை அருள்வாக்கின் மூலம் தேர்வு செய்வர் முறையான திருமணமுறையினைச் செய்தவர் மட்டும் பூசாரியாக நியமிக்கப்படுகின்றனர். மலையனூர் அம்மனை வழிபட இம்மக்கள் நரபலியினைக் கொடுக்கின்றனர். ஆடு, கோழி, பன்றி ஆகிய விலங்குகளைப் பலிதருவதன் மூலம் இம்மக்களின் குல விருத்தி பெரும் என்ற நம்பிக்கையினைக் கொண்டுள்ளனர்”.

## பாம்பு வழிபாடு

போயர் இன மக்களிடையே பாம்பு வழிபாடும் உண்டு. அம்மக்களின் வீடுகளுக்குள் பாம்பு புகுகின்றபொழுது அதனை அடிக்காமல் வணங்கி வெளியேறுமாறு வேண்டுவர். பாம்பைக் கண்டவுடன் வணங்குவர். நெய் விளக்கை ஏற்றுவர். நாகதேவதைகளின் பெயரைக் கூறுவர். இன்னது செய்வதாக வேண்டிக் கொள்வர். “இன்னும் சில மக்கள் கிண்ணத்தில் பாலை ஊற்றி நாகத்தின் முன் வைத்து நாக நாக போய்விடு என வேண்டுவர். இம்மக்கள் தவிர்க்க முடியாச் சூழலில் நாகப்பாம்பை அடித்துக் கொன்றுவிட்டால் அதற்காக வருந்துவர். பாம்பு தம் குலத்திற்குத் தீங்குதரும் என்று அஞ்சுவர். எனவே அடித்த பாம்பினைத் துணியால் எடுப்பர். வெள்ளைத் துணியில் எரித்து விடுவார்கள். பின்பு மறுநாள் பாம்புப் புற்றிற்கு மஞ்சள் குங்குமம், பால், முட்டை போன்ற பொருட்களை வைத்து வழிபடும் வழக்கம் இம்மக்களிடையே உண்டு. கனவில் பாம்பு தோன்றினால் கெட்டசகுனம் என்று இம்மக்கள் நம்பிக்கை கொள்கின்றனர்”[12] எனத் தகவலாளர் இரத்தினம் கூறுகிறார்.

## ஊர்த்தெய்வ வழிபாடு

தருமபுரி மாவட்டத்தில் பல்வேறு ஊர்த்தெய்வங்கள் உள்ளன. அவைகளில் போயர் இன மக்கள் காளியம்மன், மாரியம்மன் போன்ற கோயில்களில் தம்முடைய குலவிருத்திகாகவும் நோய்கள்

நொடிகள் நீங்க இத்தெய்வங்களை வழிபடுகின்றனர். தாம் வேண்டுகிறபொழுது தன்னுடைய காரியங்களை நிறைவேற்ற நேர்த்திக்கடன் செய்கின்றனர். இத்தெய்வங்களை வழிபடுவதன் வழி தம் குடும்பத்தினருக்கு நன்மை சேரும் என நம்புகின்றனர். அவ்வாறு நேர்த்திக்கடன் செய்யத் தவறினால் தன்னுடைய குடும்பத்திற்குத் தீங்கு ஏற்படும் என்ற நம்பிக்கை இம்மக்களிடையே உண்டு.

## முடிவுரை

மக்களிடம் நிலவிய அச்சவுணர்வு காரணமாக அன்பாக மலர்ந்து நாளடைவில் அருளாக வளர்ந்த நிலையை வழிபாட்டுச் செயல்கள் தெரிவிக்கின்றன. மனிதன் நன்றி உணர்வு மேலோங்க வழிபாட்டு முறைகள் காரணமாக அமைகின்றது. இயற்கைச் சீற்றத்தினைக் கண்டு அஞ்சிய மனிதன் அதனை அமைதிப்படுத்த முயன்றபோது வழிபாடு தோற்றம் பெற்றது. படிப்படியாக ஏற்பட்ட மனித இனச் சிந்தனை வளர்ச்சியின் காரணமாக பல்வேறு வழிபாட்டு முறைகள் உருவாகியுள்ளன. தருமபுரி மாவட்டப் போயர் இன மக்கள் இயற்கை, சிறுதெய்வம், பெருதெய்வம், முன்னோர், குலதெய்வம் என்ற முறையில் கடவுளை வழிபடுவதை உணரமுடிகின்றது. தொடக்ககால மக்களின் வழக்கில் இருந்த பாம்பு வழிபாட்டை இம்மக்கள் கடைப்பிடித்து வருகின்றனர். போயர் இன மக்கள் ஆண்டுக்கு ஒருமுறை முன்னோர்களை வழிபடும் வழக்கம் உண்டு. போயர் இன மக்கள் தீமையிலிருந்து விடுபடவும் நன்மை பெறவும் குலதெய்வத்தை வழிபடுவதோடு மட்டுமின்றி வழிபாட்டுச் சடங்குகளையும் சிறப்பாகச் செய்கின்றனர். குலதெய்வங்களின் சீற்றத்தைப் போக்கி அருள்பெறவும் உறவினர்கள் தத்தம் பகை மறந்து ஒன்று சேரவேண்டும் என்பது குலதெய்வ வழிபாட்டின் நோக்கமாக இருப்பதை உணரமுடிகிறது. போயர் இன மக்கள் குலதெய்வ வழிபாட்டைச் சிறப்பாகவும் செம்மையாகவும் தனித்துவம் வாய்ந்ததாகவும் செய்வர். ஆகவே இவர்களிடம் இயற்கையாவே வழிபாட்டுணர்வு மேலோங்கிக் காணப்படுகிறது என்ற பண்பு வெளிப்படுகின்றது.

## References


Marutidasan (2019) Narmada's Tamil Dictionary, Narmada Publishing House, Chennai, India

Ramasubramaniam, V. (2002) Thirumal Tamil Dictionary, Thirumal Publishing House, Chennai, India

Sakthivel, S. (1989) Folklore Study, Manivasakar Publications, Chennai, India

Sankaralingamudiyar, N.S. (2014) Vellivizha Tamil Peragarathi Vol-2, Tamil Manpathipagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License